**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணைஇயக்குநர் (தொழிற்கல்வி)**
**செயல்முறைகள், சென்னை–6.**

ந.க.எண்.50510/பிடி2/இ2/2021, நாள். 29.09.2022

*****

**பொருள்:** பள்ளிக் கல்வி – அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டது – சார்ந்து.

**பார்வை:** அரசாணை (நிலை) எண்.173, பள்ளிக்கல்வித் (பக7(1)) துறை நாள்.13.12.2021.

-----

பார்வையில் காணும் அரசாணையின்படி தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் சீரமைக்கப்பட்டு மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் விதமாக தொழிற்கல்வி பாடப்பிரிவிலிருந்த 12 பாடநூல்களில் 8 பாடநூல்கள் மாற்றம் செய்யப்பட்டு, புதியதாக வேலைவாய்ப்புத் திறன்கள் என்ற பாடநூல் அறிமுகப்படுத்தப்பட்டு 2022–23ஆம் கல்வியாண்டு முதல் இப்பாடநூல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து தொழிற்கல்வி பாடத்தினை மேம்படுத்தும் வகையில் அரசு மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களுடன் இணைந்து செயல்முறை பாடத்திட்டத்தினை கற்பிப்பதற்கு ஏதுவாக தொழிற்கல்வி பயிற்றுநர்கள் (Vocational Trainers) பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பட்டியலில் உள்ள தொழிற்கல்வி பயிற்றுநர்கள் 03.10.2022 அன்று அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் பணியில் சேர ஏதுவாக பட்டியலினை சார்ந்த பள்ளிகளுக்கு அனுப்பி தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைஇயக்குநர் (தொழிற்கல்வி)
29/9/22 29/9/22

இணைப்பு:– பட்டியல்

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்,

நகல்
1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6. பணிந்து அனுப்பலாகிறது.
2. Concerned Vocational Training Providers.